

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆகியோர் நேற்று (14.08.2025) 4வது சர்வதேச பட்டம் விடும் திருவிழாவினை செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் திருவிடந்தை கடற்கரையில் தொடங்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ். எஸ்.பாலாஜி, செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் ம.வரலட்சுமி மதுசூதனன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் தி.சினேகா, செங்கல்பட்டு சார் ஆட்சியர் எஸ்.மாலதி ஹெலன், பொது மேலாளர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ச.கவிதா, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் இதயவர்மன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று (14.08.2025) தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மைச் செயலர் பிரஜேந்திர நவ்நீத், ஆகியோரின் முன்னிலையில், தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை முதன்மை செயல் அலுவலர் மரு. ஆல்பி ஜான் வர்கீஸ், மற்றும் ரவி கார்க், Director, Business Messaging, Meta in India ஆகியோர் வாட்ஸ்ஆப் அடிப்படையிலான குடிமக்கள் சேவைகளை அறிமுகப்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டனர். இந்நிகழ்வின் போது தமிழ்நாடு மின் ஆளுமை முகமை இணை முதன்மை செயல் அலுவலர் ஸ்ருதஞ்ஜெய் நாராயணன், இணை இயக்குநர் திருமதி பிரியா மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை அலுவலர்கள் உடனிருந்தனர்.

### ‘உங்களுடன் ஸ்டாலின்’ ‘‘நலம் காக்கும் ஸ்டாலின்’’ திட்டங்கள் குறித்து

# அனைத்து மாவட்ட ஆட்சியர்களுடன் ஆய்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலியில் மேற்கொண்டார்!

**சென்னை, ஆக.15–**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.8.2025) தலைமைச் செயலகத்தில், “உங்களுடன் ஸ்டாலின்” மற்றும் “நலம் காக்கும் ஸ்டாலின்” ஆகிய திட்டங்களின் செயலாக்கம் குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார்.**

இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பொதுமக்களின் பல்வேறு கோரிக்கைகளையும் தேவைகளையும் உடனடியாக குறிப்பிட்ட கால அளவிற்குள் தீர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தொடங்கப்பட்டு சிறப்பாக நடத்தப்பட்டு வரும் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்று வருவதை தொடர்ந்து, இதற்காக நன்கு திட்டமிட்டுப் பணியாற்றி வரும் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்களையும் பாராட்டினார்.

அதேபோன்று, பொதுமக்களின் உடல் நலம் காக்கும் வகையில் நடத்தப்பட்டு வரும் “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்டமும் மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால், அதற்கான பணிகளில் ஈடுபட்டு வரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையைச் சார்ந்த மருத்துவர்கள் மற்றும் துறை அலுவலர்களையும் பாராட்டினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் பெறப்பட்ட மனுக்களுக்கு விரைவாகத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும், குறிப்பாக, வருவாய்த் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளில் நிலுவையில் உள்ள மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

முதியோர் ஓய்வூதியம், பட்டா மாறுதல், பட்டாவில் பெயர் திருத்தம் ஆகியவை தொடர்பான மனுக்களில் நிலுவையில் உள்ளவற்றை விரைந்து நடவடிக்கை எடுத்து பயனாளிகளுக்கு உரிய உதவிகளை செய்திட வேண்டு மென்று கேட்டுக் கொண்டதோடு, பொதுமக்கள் அளிக்கும் மனுக்களுக்கு முடிவான பதில் தரப்பட வேண்டும் என்று ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டதை மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் வலியுறுத்தினார்.

“உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்களில் நடைபெறும் இடங்களில் பொதுமக்களுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்த விவரங்களையும் கேட்டறிந்தார்.

‘நலம் காக்கும் ஸ்டாலின்’ முகாம்களின் திட்ட ஏற்பாடுகளில் ஒருசில இடங்களில் இரத்தப் பரிசோதனை முடிவுகள் வழங்குவதில் தாமதம், போக்குவரத்து ஏற்பாடுகள் போன்றவை குறித்து தனது கவனத்திற்கு வந்ததாகவும், அதனை சரிசெய்திட வேண்டுமென்று அறிவுறுத்தியதோடு, டோக்கன் வழங்கும் பகுதிகளில் கூட்டத்தை கட்டுப்படுத்திட அதிக கவுண்டர்களை ஏற்படுத்திட வேண்டும் என்றும், முகாம்கள் நடப்பது குறித்து பொதுமக்கள் அறிந்திடும் வகையில் விளம்பரங்கள் செய்திட வேண்டும் என்றும், முகாம்களில் பொதுமக்களுக்கு குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் போதுமான அளவு ஏற்படுத்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இவற்றையெல்லாம், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கவனத்தில் கொண்டு, குறைபாடுகள் இல்லாமல் “உங்களுடன் ஸ்டாலின்” மற்றும் “நலம் காக்கும் ஸ்டாலின்” முகாம்களை நடத்திட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதோடு, முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மீது உரிய காலத்தில் நடவடிக்கை மேற்கொண்டு, மனுதாரர்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு கண்டு, அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்துதர வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உச்சநீதிமன்ற உத்தரவுப்படி அபராதம் விதிக்கப்பட்ட

### அ.தி.மு.க. எம்.பி.யான சி.வி.சண்முகம் தமிழ்நாடு அரசுக்குச் செலுத்திய

# ரூ.10 லட்சம் - கல்வராயன் மலைவாழ் மக்களுக்காக அரசு நடத்தும் “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்டத்திற்கு பயன்படுத்தப்படும்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

*சென்னை, ஆக. 15-*

உச்சநீதிமன்ற உத்தரவுப்படி, அபராதம் விதிக்கப்பட்ட அ.தி.மு.க. எம்.பி.யான சி.வி.சண்முகம், தமிழ்நாடு அரசுக்கு செலுத்திய ரூபாய் 10 லட்சம் கல்வராயன் மலை வட்டார மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த அங்கு நடைபெறும் ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்டத்திற்கு பயன்படுத்திக்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளதாக அரசின் ‘முதல்வரின் முகவரித் துறை’ தெரிவித்துள்ளது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 15.07.2025 அன்று கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் அரசு துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் அவர்களைச் சென்று சேரும் வகையிலும் நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திட, “உங்களுடன் ஸ்டாலின்” என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்தார்.

‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டத்தில் முதலமைச்சர் ஸ்டாலின் பெயரைப் பயன்படுத்த அனுமதி அளிக்கக் கூடாது என அ.தி.மு.க. எம்.பி. சி.வி. சண்முகம் அவர்களால் தொடரப்பட்ட வழக்கின் மீது தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்கில், உச்சநீதிமன்றம் அம்மனுவை தள்ளுபடி செய்தும், ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பெயரைப் பயன்படுத்த அனுமதி அளித்தும், வழக்கு தொடுத்த சி.வி.சண்முகம் அவர்களுக்கு ரூ.10 லட்சம் அபராதம் விதித்தும் உத்தரவிட்டது.

இந்த அபராதத் தொகையினை தமிழ்நாடு அரசுக்கு செலுத்தவும், அந்த தொகையினை தமிழ்நாடு அரசு சார்பில் விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்கு செயல்படுத்தப்படும் நலத்திட்டங்களுக்காக பயன்படுத்தவும் உத்தரவிட்டது.

இந்த உத்தரவிற்கிணங்க சி.வி. சண்முகம் அவர்கள் அபராதத் தொகையான ரூ.10 லட்சத்தை நேற்று (14.8.2025) தமிழ்நாடு அரசுக்கு செலுத்தியுள்ளார்.

தமிழ்நாடு அரசு இந்த தொகையை கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கல்வராயன் மலை வட்டாரத்தில் அதிகமாக வசிக்கும் மலைவாழ் மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த சுகாதார நலத்திட்டங்களுக்கும் அங்கு நடைபெறும் ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்டத்திற்கும் பயன்படுத்தி கொள்ளவும் உத்தரவிட்டுள்ளது.

### தூய்மைப் பணியாளர்களுக்கு

# எண்ணற்ற திட்டங்களை அறிவித்த முதல்வருக்கு நன்றி!

## பெருநகர சென்னை மாநகராட்சி டாக்டர் அம்பேத்கர் பணியாளர் சங்கம் அறிக்கை!

*சென்னை, ஆக. 15-*

“தூய்மைப் பணியாளர்களுக்கு எண்ணற்ற திட்டங்களை அறிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி டாக்டர் அம்பேத்தர் பணியாளர் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

இது குறித்து இச்சங்கத்தின் பொதுச் செயலாளர் சு.அன்புதாசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பெருநகர சென்னை மாநகராட்சி டாக்டர் அம்பேத்கர் பணியாளர் சங்கத்தின் சார்பில் கோடான கோடி நன்றி.

தூய்மை பணியாளர்களில் SC/ST பணியாளர்கள் அதிகப்படியாக பணிபுரிந்து வருகின்றார்கள். அவர்களின் மேல் அக்கறையுடன் கனிவுடன் அரசு உள்ளது.

1) திராவிட மாடல் அரசு தூய்மை பணியாளர்களுக்கு வாரியம் கொண்டு வந்தது.

2) தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு திட்டம் இந்தியாவிலேயே தமிழ்நாடு அரசு திராவிட மாடல் அரசுதான் முன்னோடியாக உள்ளது.

3) தூய்மை பணியாளர்களுக்கு பணியின்போது இறந்தால் ரூ.10,00,000/- பத்து லட்சம் அறிவித்துள்ளது.

4) தூய்மை பணியாளர்களின் குழந்தைகளுக்கு உயர்கல்வி ஊக்கத் தொகை.

5) தூய்மை பணியாளர்களுக்கு 30 ஆயிரம் வீடுகள்.

6) தூய்மை பணியாளர்களின் எதிர்காலத்தில் அக்கறை கொண்டு மருத்துவ தனித்திட்டம்.

7) தூய்மை பணியாளர்களின் குடும்பத்தினருக்கு சுயதொழில் உதவி.

எண்ணற்ற திட்டங்களை அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் உள்ளாட்சி தூய்மை பணியாளர்கள் சார்பில் திராவிட மாடல் அரசு கொடுத்துள்ள எண்ணற்ற சாதனைகளுக்கு சங்கத்தின் சார்பில் கோடான கோடி நன்றிகள்.

இவ்வாறு சு.அன்புதாசன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### ஆர்.எஸ்.எஸ். மனநிலையுடன்

# பள்ளிகள் மீது ஆளுநர் அவதூறு பரப்புகிறார்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கண்டனம்!

*சென்னை, ஆக. 15-*

ஆர்.எஸ்.எஸ். மனநிலையுடன் அரசுப் பள்ளிகள் மீது அவதூறு பரப்புவதா என்று ஆளுநர் ரவிக்கு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கண்டனம் தெரிவித்துள்ளார்.



பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், ஆர்.எஸ்.எஸ். மனநிலையுடன் எப்போதும் அரசுப் பள்ளிகள் மீது ஆளுநர் ஆர்.என். ரவி அவதூறு பரப்புகிறார் என்று தெரிவித்துள்ளார்.

ஏழை மாணவர்களின் படிப்பின் மீது அக்கறை உள்ளவர் போல, “நானும் தமிழ்நாட்டில்தான் இருக்கிறேன்” என்பதை காட்டிக்கொள்வதற்காக நான் கைந்து மாதங்களுக்கு ஒருமுறை பள்ளிக் கல்வித் துறையை நோக்கி இப்படி பேசுவது ஆளுநரின் வாடிக்கையாகிவிட்டது என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

எங்கள் அரசுப் பள்ளி மாணவர்களும், ஆசிரியர்களும் நிகழ்த்திக் காட்டும் சாதனைகள் எண்ணிலடங்காதது. சாதனையாளர்களை மக்களும் திராவிட மாடல் அரசும் கொண்டாடி வருகிறது என்றும் அவர் பெருமித்துடன் தெரிவித்துள்ளார். கமலாலயத்தின் ASER எனும் போலி அறிக்கையை உயர்த்திப்பிடிக்கும் நீங்கள், அரசுப் பள்ளிகளின் மீது அக்கறை இருந்தால் டெல்லியை நோக்கி “தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய கல்வி நிதி என்னவானது? என்று கேளுங்கள் என்றும் ஆளுநர் ரவிக்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதிலடி கொடுத்துள்ளார்.

### இராயபுரம் – துறைமுகம் தொகுதியில்

# ‘முதல்வர் படைப்பகம்’ அமைப்பதற்கான பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

*சென்னை, ஆக. 15-*

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி நேற்று (14.8.2025) இராயபுரம் சட்டமன்ற தொகுதியில் வட சென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்படவுள்ள மூலக்கொத்தளம் விளையாட்டு அரங்கம் மற்றும் துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, ஏழுகிணறு, சண்முகம் தெருவில் அரசு பொது நூலகத்தை மேம்படுத்தி “முதல்வர் படைப்பகம்” அமைப்பதற்கான பூமி பூஜையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மேயர் ஆர்.பிரியா, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மாநகராட்சி நகரமைப்பு குழுத் தலைவர் இளைய அருணா, மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, சிஎம்டிஏ தலைமைப் பொறியாளர் மகா விஷ்ணு, கண்காணிப்புப் பொறியாளர் ராஜன்பாபு, மாவட்ட நூலக அலுவலர் கவிதா, உள்ளாட்சி பிரதிநிதிகள் எஸ்.முரளி, இராஜசேகர், மாமன்ற உறுப்பினர்கள் தாஹா நவீன், திருமதி. வேளாங்கன்னி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### 2025 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு

# 15 காவல் துறை அதிகாரிகளுக்கு சிறப்புப் பதக்கங்கள்!

*சென்னை, ஆக. 15-*

புலன் விசாரணைப் பணியில் மிகச் சிறப்பாகப் பணியாற்றியதை அங்கீகரிக்கும் வகையிலும், பணியில் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புடன் பணி புரிந்ததை பாராட்டும் வகையிலும் கீழ்கண்ட 10 காவல்துறை அதிகாரிகள் 2025-ம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் புலன் விசாரணைக்கான சிறப்புப்பணிப் பதக்கங்கள் வழங்க தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள்:-

1.திருமதி க.த. பூரணி, காவல் துணை கண்காணிப்பாளர் சைபர் கிரைம் செல் பிரிவு, குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை, சென்னை.

2.திருமதி பி. உலகராணி, காவல் ஆய்வாளர், குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை, திருநெல்வேலி.

3. திருமதி மா.லதா, காவல் ஆய்வாளர், கடத்தல் தடுப்பு பிரிவு, குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, சென்னை.

4. திரு. மு.செந்தில்குமார், காவல் ஆய்வாளர், மகுடஞ்சாவடி காவல் நிலையம், சேலம் மாவட்டம்.

5. திருமதி ஜெ.கல்பனா தத், துணைக் காவல் கண்காணிப்பாளர், குற்றப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, தஞ்சாவூர்.

6. திருமதி வே.சந்தான லெட்சுமி, காவல் ஆய்வாளர், குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை, திண்டுக்கல்.

7. திரு. மா.வசந்தகுமார், காவல் ஆய்வாளர், பெருமாநல்லூர் காவல் நிலையம், திருப்பூர் மாவட்டம்.

8. திரு. வெ.ஜெகநாதன், காவல் ஆய்வாளர், வடக்கு காவல் நிலையம், திருப்பூர் மாநகரம்.

9. திருமதி கோ.திலகா தேவி, காவல் ஆய்வாளர், குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை,அரியலூர்.

10. திருமதி இரா.புவனேஸ்வரி,காவல் ஆய்வாளர், குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, நாகப்பட்டினம்.

இதே போன்று பொது மக்களின் சேவையில் தன்னலம் கருதாமல் சிறப்பாக செயல்பட்டு சீரிய பணியாற்றிய கீழ்கண்ட 5 காவல் துறை அதிகாரிகளுக்கு 2025-ம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு அவர்களது பணியைப் பாராட்டி சிறந்த பொதுச் சேவைக்கான தமிழக முதலமைச்சரின் காவல் பதக்கங்கள் வழங்க தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள்:-

1. முனைவர். மஹேஷ்வர் தயாள், கூடுதல் காவல் துறை இயக்குநர் மற்றும் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர், சென்னை.

2. திரு. ஜெ. மகேஷ், காவல் துறைத் துணைத் தலைவர், நுண்ணறிவு (உள்நாட்டுப் பாதுகாப்பு), சென்னை.

3. திரு. நை. சிலம்பரசன், காவல் கண்காணிப்பாளர், திருநெல்வேலி மாவட்டம்.

4. திரு. கு. பிரவின் குமார், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தனிப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, தலைமையகம், சென்னை.

5. திருமதி தா.மேரிரஜு காவல் ஆய்வாளர், சென்னை பெருநகர காவல்துறை

விருதுகள் பெறுவோர் ஒவ்வொருவருக்கும் தலா எட்டு கிராம் எடையுடன் கூடிய தங்கப் பதக்கமும், 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் வழங்கப்படும். மேற்கண்ட விருதுகள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பிறிதொரு விழாவில் வழங்கப்படும்.

### கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

# மாநில, மாவட்ட மற்றும் மாநகர நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## செயலாளர் டாக்டர்.அ.சுபேர்கான் அறிவிப்பு!

*சென்னை, ஆக. 15-*

கழகத்தலைவர் முதல்வர் அவர்களின் நல் வழிகாட்டுதலின்படியும், கழக இளைஞரணிச் செயலாளர் துணை முதல்வர் அவர்களின் ஆலோசனையின்படியும், கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில, மாவட்ட மற்றும் மாநகர நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (15-08-2025 - வெள்ளி) மாலை 6 மணியளவில் காணொலி காட்சி வாயிலாக நடைபெறவுள்ளது. காணொலி காட்சி வாயிலாக நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள், மாவட்டம் மற்றும் மாநகர தலைவர், துணை தலைவர், அமைப்பாளர் மற்றும் மாவட்ட, மாநகர துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : கழக அரசு சிறுபான்மையின மக்கள் நலனுக்காக ஆற்றியுள்ள சாதனைகளின் பிரச்சார கூட்டம் மற்றும் கழக ஆக்கப்பணிகள் தொடர்பாக

இவ்வாறு டாக்டர்.அ. சுபேர்கான் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.